**இலங்கை மன்றம் - 2014**

---------------------------------------------

இலங்கை மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 31 ஆம் இலக்க இலங்கை மன்ற அதிகாரச்சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 2.1 அபிப்பிராயம்

-----------------------

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இவக்கம் 07 இன் படி முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டு முடிவடைந்திருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 12,426,541 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதி காண்பிக்கப்படாமையால் நிலையான சொத்துக்கள் மீள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | முற்பணம் வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் வாகன பழுதுபார்த்தல் செலவினங்கள் மற்றும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு சமுகமளித்தமைக்கு செலுத்தப்பட்ட செலவினம் என்பவற்றிற்காக ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட ரூபா 433,150 கூட்டுத்தொகையான 06 முற்பணங்களைத் தீர்க்கும் போது 01 மாதம் முதல் 09 மாதங்கள் வரையிலான தாமதம் ஏற்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 757(ஆ) | மீளாய்வாண்டிற்காக முறையான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 1645(இ) | ஓட்டக் குறிப்புக்களில் வாகனம் பிரயாணஞ் செய்த இடங்கள் மற்றும் பிரயாணம் செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு | நிறுவகத்திற்குச் சொந்தமான வளங்கள் வரிசை அமைச்சிற்கோ அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கோ வழங்கப்பட கூடாத போதிலும் இலங்கை மன்றத்தின் உத்தியோகத்தரொருவர் சனாதிபதி செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டு 2014 ஒக்தேபர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக சம்பளமாக ரூபா 143,446 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 30 உத்தியோகத்தர்களுக்கு வழங்கக்கூடிய ஆகக் கூடிய கடன் எல்லையினை விஞ்சி இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 8,055,235 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,897,396 ஆக இருந்தது. அதன் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 2,157,839 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கை மன்ற அதிகாரச்சட்டத்தின் 05 ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்ட மன்றத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளான சனநாயக வாழ்க்கை முறை தொடர்பான புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையினை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், அந்த விடயங்களை அபிவிருத்தி செய்யும் வகையில் இனம், பால் தன்மை, மொழி, மாதம், நிறம் அல்லது நம்பிக்கைப் பெறுமதிகளை கருத்தில் கொள்ளாது அனைவரதும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் பின்பற்றப்படுவதற்காக தேசிய ரீதியில் புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பையும் அது தொடர்பாக சர்வதேச கௌரவத்தையும் கட்டியெழுப்புதல், அவற்றை அபிவிருத்தி செய்தல் ஊடாக பொதுமக்களுக்கு சகல விடயங்களின் அறிவு மற்றும் சமூக முன்னேற்றம் தொடர்பான கல்வி மற்றும் அறிவை வழங்குவதற்கும் அவர்களிடையே அந்த அறிவினை பரவலாக்குவதற்கு தைரியமளித்தல் மற்றும் அவற்றைக் கட்டியெழுப்புதல் என்பவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவையிலிருந்து அகற்றப்பட்ட 8 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 197,833 தொகை அந்த உத்தியோகத்தர்களை சேவையிலிருந்து விடுவிப்பதற்கு முன்னர் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய பணிப்பாளரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 283,989 தொகை 2006 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இடர் அபாயங்களைக் குறைப்பதற்காக புத்தகமொன்றை அச்சிடுவதற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு 2013 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 107,496

தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 ஏப்ரல் 30 வரையிலும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**4.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மன்றத்தால் நடாத்தப்படுகின்ற பயிற்சி மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றாத 51 நபர்களுக்கு நிதி அறவீடின்றி முறையற்ற வகையில் விடுதியில் அறைகள் வழங்கப்பட்டிருந்தன.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 11 ஆந் திகதி முதல் 2015 சனவரி 09 ஆந் திகதி வரையான 30 நாட்கள் விடுதியில் தங்கியிருந்த விடுதியாளரொருவரிடம் மற்றும் 2014 திசெம்பர் 14 ஆந் திகதி முதல் 2015 சனவரி 06 அந் திகதி வரை விடுதியில் 23 நாட்கள் தங்கியிருந்த சில விடுதியாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 255,898 தொகை 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 14 சந்தர்ப்பங்களில் விரிவுரை மண்டப கட்டணம் அறவிடப்படாமல் முறையற்ற வகையில் தனியார் மற்றும் பொதுத்துறை நிறவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 1,043,480 தொகையான கடன்பட்டோர் அறவிடமுடியாக் கடனாக பதிவிழக்கப்பட்டிருந்ததுடன் அதில் காணப்பட்ட இரண்டு வருடங்களாவது பழமையாகாத இரண்டு நபர்களிடமிருந்தும் 08 நிறுவனங்களிலிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 840,610 தொகையான கடன் தொகையினை பதிவழித்தமை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

**4.5 வெளிப்படையான மோசடிகள்**

வாகனத்தில் பயணம் செய்த உத்தியோகத்தர் தொடர்பான விபரங்களின்றி 2014 செப்தெம்பர் 10 ஆந் திகதி 312 கி.மீ. பேராதனை பல்கலைக்கழகத்திற்கு பிரயாணம் செய்து திரும்ப வந்திருந்ததுடன் உரிய கடமைகள் தொடர்பான

விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாமல் அலுவலக கடமையாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை மன்றத்தினால் அத்திகதியில் பேராதனை பல்கலைக்கழகத்தில் நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவகத்தின் வளங்கள்**

மன்றத்தின் ஒரு பகுதியாகச் செயற்பட்ட இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவகம் 2010 நவம்பர் 22 ஆம் திகதிய 1681/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் ஊடகங்கள் மற்றும் தகவல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் 2011 நவம்பர் மாதத்தில் அந்நிறுவகத்தின் காணி மற்றும் கட்டிடங்கள் தவிர ஏனைய சகல சொத்துக்களும் அமைச்சிற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது டிப்ளோமாவும் 47 சான்றிதழ் பத்திர பாடநெறிகளும் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதில் 13 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத பாடநெறிகளாகும். செயல்நடவடிக்கைத் திட்டம் காலரீதியாக திருத்தப்படாமையின் காரணமாக இப்பாடநெறிகளை நடாத்துவதிலுள்ள செயல்முன்னேற்றத்தை பரிசீலனை செய்ய முடியாதிருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மீளாய்வாண்டின் போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட கட்புலன் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி (HND in Optometry) மற்றும் கலை மற்றும் திரைப்பட கல்லூரி (Digital and Film Academy) பிரிவின் மூலம் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட டிப்ளோமாவும் 26 சான்றிதழ் பத்திர பாடநெறிகளும் உள்ளடங்கலாக 27 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5.2 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

இலங்கை மன்றத்திற்கும் தனியார் கம்பனியொன்றுக்குமிடையே ஏற்பட்ட வழக்கு தீர்ப்பின் படி தீர்ப்பு வழங்கப்பட்ட 2013 திசெம்பர் 07 ஆம் திகதியிலிருந்து 35 நாட்களுக்குள் இலங்கை மன்றத்தால் உரிய கம்பனிக்கு ரூபா 1,159,525 தொகை செலுத்த வேண்டியிருந்த போதிலும் அது கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்ரல் 06 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. தீர்ப்பின்படி, அக்கம்பனியுடன் செய்யப்பட்டிருந்த முதலாவது உடன்படிக்கையின் 60(7) ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி, மன்றத்திற்கு தாமதத்திற்கான வட்டி செலுத்தப்பட வேண்டியேற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும், கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கொள்வனவுகள்
(ஆ) கடன்பட்டோர்
(இ) ஆளணி நிருவாகம்
(ஈ) விடுதிக் கட்டுப்பாடு
(உ) வாகனக் கட்டுப்பாடு